**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 312 நாள்: 20.07.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

இன்று (20.07.2026) பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

**வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு:**

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ,ஆ.ப, அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வார்டு-21க்குட்பட்ட பாடசாலை தெருவில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமானப் பணி, வார்டு-20க்குட்பட்ட காமராஜர் சாலையில் உள்ள அம்மா உணவகம், இலவச ஒப்பனை அறை, மணலி ஏரி படகுக் குழாம், குளிர்சாதன வசதிகளுடன் கூடிய பேருந்து நிறுத்தம், தந்தை பெரியார் நகரில் உள்ள சீடக்ஸ் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-37க்குட்பட்ட முல்லை நகர் மேம்பாலம் பகுதியில் பக்கிங்ஹாம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, முல்லை நகர் மேம்பாலம் பகுதியில் உள்ள வண்டல் வடிகட்டி தொட்டியில் உள்ள வண்டல் மண் சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் அகற்றும் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும். அம்மா உணவகங்களில் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு, சமையலறையினைத் தூய்மையாக பராமரித்திடவும், இலவச பொது கழிவறையினை தூய்மையாகப் பாராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு:**

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-100க்குட்பட்ட டைலர்ஸ் சாலையில் உள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு, சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும் அறிவுறுத்தினார். அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**தெற்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு:**

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-168க்குட்பட்ட பகுதியில் உள்ள சிட்கோ கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, மாஞ்சோலை மயானபூமியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணி, வார்டு-170க்குட்பட்ட ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு, சமையலறையின் தூய்மையாக பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வார்டு-169க்குட்பட்ட ரெட்டிகுப்பம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, வெங்கடபுரம் பகுதியில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடத்தின் கட்டுமானப் பணி உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**